## 4

# உடன்படிக்கை & கட்டளை

## (யாத்திராகமம் 20)

*2001ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில், அலபாமா உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியான ராய் மூர் அவர்கள், அலபாமா உயர்நீதிமன்றக் கட்டிடத்தில் பத்துக் கட்டளைகளைக் காட்சிப்படுத்த, ஐயாயிரம் பவுண்டு நிறையுள்ள கருங்கல் நினைவுச் சின்னத்தை எழுப்பியபோது, முரண்பாட்டின் விவாதப் புயல் ஒன்று உண்டாயிற்று. நீதிபதி மூர் அவர்கள் தமது செயல்பாட்டைத் தற்காக்க, பத்துக் கட்டளைகள் தான் அமெரிக்காவின் சட்டத்திற்கும் சட்ட முறைமைகளுக்கும் அடிப்படை என்று சுட்டிக் காண்பித்து, எனவே அவைகள் ஒரு நீதிமன்றக் கட்டிடத்தில் காட்சிப்படுத்த ஏற்புடையவையே என்று வாதிட்டார். இருப்பினும் இந்த விவாதம், பத்துக்கட்டளைகளை வெளியரங்கமாகக் காட்சிப்படுத்துதல் என்பது "சபையையும் நாட்டையும் பிரித்துப் பார்த்தல்" என்ற கொள்கையை மீறியதாகும் என்ற கருத்தைப் பராமரித்து, ஒரு வழக்கைப் பதிவு செய்வதில் இருந்து, அமெரிக்க குடிமை உரிமைக் கழகம் மற்றும் பிற நிறுவனங்களை நிறுத்தி வைக்கவில்லை. இரு ஆண்டுகளுக்குப் பின்பு அந்த நினைவுச் சின்னமானது வெளியரங்கமான காட்சியில் இருந்து நீக்கப்பட்டது மற்றும் நீதிபதி மூர் அவர்கள், அதனை நீக்க வேண்டும் என்ற ஐக்கிய நாட்டின் நீதிமன்ற ஆணையைப் புறக்கணித்தமைக்காகப் பணியில் இருந்து நீக்கப்பட்டார்.*

*இதில் உள்ளடங்கியிருந்த சட்டப் பிரச்சனைகள் இருந்தாலும், நீதிபதி மூர் அவர்கள் சரியாகவே செயல்பட்டார் என்பது பற்றிக் கேள்வி எதுவும் இல்லை: பத்துக் கட்டளைகள், அமெரிக்க சட்ட மற்றும் சட்டப்பூர்வ முறைமைகளுக்கு அடிப்படையை வடிவமைக்கின்றன - மற்றும் அவை அமெரிக்க நாட்டின் ஒழுக்க முறைமைக் கருத்துக்களுக்கும் பொதுவான அடிப்படையை வடிவமைக்கின்றன. இதற்கும் மேலாக, பத்துக் கட்டளைகள் மேற்கத்தியக் கலாச்சாரரீதியான சிந்தனையின் பாகமாக உள்ளன.*

*உதாரணமாக, ஏதேனும் ஒரு விஷயம் நிரந்தரமானது மற்றும் கட்டுப்படுத்தக் கூடியது என்று நாம் கூற விரும்பும்போது, அது "கல்லில் எழுதப்பட்டுள்ளது" என்று நாம் கூறுகிறோம், இது தேவனால் தோற்றக் காலத்தில் கற்பலகைகளில் பொறிக்கப்பட்ட கட்டளைகளுக்கான குறிப்பாக உள்ளது. திட்டவட்டமான எந்த ஒரு பட்டியலும் "பத்துக் கட்டளைகள்" என்று குறிப்பிடப்படலாம். பாடக்கருத்தானது ஏறக்குறைய எதுவாக வேண்டுமென்றாலும் இருக்கலாம்: மக்கள் "இ - மெயிலுக்கான பத்துக் கட்டளைகள்," "பந்து விளையாட்டிற்கான பத்துக்கட்டளைகள்," "மன இறுக்கத்தை வெற்றிகொள்வதற்கான பத்துக்கட்டளைகள்," போன்றவற்றை எழுதியுள்ளனர் - மற்றும் இந்தப் பட்டியல் தொடர்ந்து வளர்ந்து கொண்டுள்ளது.*

பத்துக்கட்டளைகளின் அளவுகடந்த செல்வாக்கு இருக்கும் நிலையிலும், பல மனிதர்கள் அவற்றையோ, இஸ்ரவேல் வரலாற்றில் அவற்றின் இடத்தையோ அல்லது இன்றைய மார்க்கரீதியான வாழ்வில் அவற்றின் பணிப்பொறுப்பையோ புரிந்து கொள்வதில்லை. இந்தக் கட்டளைகளின் இன்னொரு கண்ணோக்கை நாம் மேற்கொண்டு அவைகள் எவற்றைப் பற்றியவை என்பதைப் புரிந்து கொள்ள நாம் முயற்சி செய்வோமாக.

## பத்துக்கட்டளைகளைப் பற்றிய பொதுவான கடைப்பிடித்தல்கள்

*பத்துக்கட்டளைகள் என்பவை தேவனுடைய பரிசுத்தம் மற்றும் கிருபை ஆகியவற்றின் வெளிப்படையான கூற்றுக்களாக உள்ளன.* எகிப்தில் இருந்து விடுதலைப் பயணம் தொடங்கிய வேளையில், ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோரின் தேவனைப் பற்றி அதிகமான அறிவு இஸ்ரவேல் மக்களுக்குத் தேவைப்பட்டது. அவர்கள் நானூறு ஆண்டுகளாக, முற்றிலும் புறதெய்வ வணக்கக் கலாச்சாரத்தில் அடிமைத் தளையில் இருந்திருந்தனர். அவர்கள் ஒரு தேவாலயத்தையோ, ஆசாரியத்துவத்தையோ அல்லது ஆவிக்குரிய வகையில் தங்களை வழிநடத்துவதற்கான வேதவசனங்களின் அமைப்பையோ கொண்டிருக்கவில்லை. ஆகவே, அவர்களை எகிப்தில் இருந்து வெளியே கொண்டு வந்த பின்பு, அவர்களை அவர்களின் தேவனோடு மீண்டும் பழக்கப்படுத்துதல் என்பது முதன்மையான பணியாக இருந்தது.

தேவன் அவர்களை எகிப்தில் இருந்து வெளியே கொண்டு வந்த உடனே, அவர் அரபியத் தீபகற்பத்தின் மீதிருந்த சீனாய் மலையின் அடிவாரத்திற்கு அவர்களை வழிநடத்தினார். அங்கே அவர்களின் தேவனாகத் தாம் இருப்பதாகவும் அவர்கள் தம்மால் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களாக இருப்பதாகவும் அவர் ஒரு உடன்படிக்கையை அவர்களுடன் ஏற்படுத்திக் கொண்டார். மோசேயின் மூலமாகத் தரப்பட்ட நியாயப்பிரமாணத்தைப் பின்பற்றுதல் என்பதே இந்த உடன்படிக்கையில் இஸ்ரவேல் மக்களின் பாகமாக இருந்தது. தேவனை முகமுகமாய் தரிசிப்பதற்காக மலையின் மீது ஏறிச் சென்ற மோசே, பத்துக் கட்டளைகளுடன் (எபிரெய மொழியில் இது “பத்து வார்த்தைகள்” என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது) இறங்கி வந்தார். இந்தக் கட்டளைகள் சில வேளைகளில் “பதின்ம உரைகள்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கர்த்தரிடம் இருந்து தரப்பட்ட “பத்து வார்த்தைகள்” அவரது இன்றியமையாத பண்புகள் இரண்டைச் சொல்விளக்கப்படுத்துகின்றன. அவைகள் அவருடைய பரிசுத்தத்தையும் அவருடைய கிருபையையும் எடுத்துரைக்கின்றன. யாத்திராகமம் 19:10-15 வசனப்பகுதியானது, மக்கள் தேவனுக்கு முன்பாக வருவதற்கு முன்பு மேற்கொள்ள வேண்டியிருந்த கவனமான ஆயத்தப்படுத்துதல்களை விவரிக்கின்றன. அவர்கள் தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொள்ளும்படியும், எவரொருவரும் பரிசுத்த மலையைத் தொடாதிருக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டனர். ஒரு மிருகம் கூட மலையைத் தொட்டால், அது கல்லால் எறிந்து அல்லது அம்பினால் எய்து கொல்லப்பட வேண்டியிருந்தது; எவரொருவரும் அதை தொடக் கூடும்படிக்கு அருகில் செல்லக் கூடாதிருந்தது. 20 முதல் 22 வரையுள்ள வசனங்கள், இந்தக் காட்சி

அமைவின் பரிசுத்தம் பற்றிய எச்சரிக்கைகளைக் கொண்டுள்ளது: கர்த்தருக்கு முன்பாக ஊழியம் செய்த ஆசாரியர்களும்கூட, கர்த்தர் "தங்களுக்குள்ளே சங்காரம் பண்ணாதபடி" (19:22) தங்களைப் பரிசுத்தப்படுத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். முற்றிலும் பரிசுத்தமாக உள்ள தேவனுடைய பிரசன்னத்தில் மக்கள் பயபக்தி மற்றும் மாட்சிமை ஆகியவற்றை அனுபவிக்க, காட்சி முழுவதும் செயல் விளக்கமாக வடிவமைக்கப்பட்டிருந்தது.

முதல் நான்கு கட்டளைகள் (20:1-11) தேவனுடைய பரிசுத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. தனிப்படப் பிரித்து மற்றும் தனிவகைப் பட்டவர்களாக இருக்கும் பண்புதான் பரிசுத்தத்தின் அடிப்படைக் கருத்தாக உள்ளது. தேவன், பல தேவர்களிடையில் "இன்னொரு தேவராக மட்டும்" இருக்கவில்லை என்பதை இஸ்ரவேல் மக்கள் உணர்ந்தறிய வேண்டியிருந்தது. உடல்ரீதியாக எவரொருவரையும் போலிருத்தல் என்பது அவரை ஒருக்காலும் போதுமான வகையில் பிரதிநிதித்துவப்படுத்த இயலாது, மற்றும் "தேவர்" என்று அழைக்கப்பட்ட வேறு எவரும், தேவனுடைய மக்கள் அவர் மீது கொண்டிருக்கும் பற்றுறுதியைப் பெறப் போட்டியிட அனுமதிக்க இயலாது. அவரது நாமம் பயபக்தியாகப் பேசப்பட வேண்டியதாக இருந்தது; மற்றும் உலகத்தை இருப்பில் கொண்டுவருவதில் அவரது படைப்பாக்கப்பணியைப் போலச் செய்தல், அவரது மக்கள் "ஓய்வுநாளை நினைவுகூர்ந்து அதைப் பரிசுத்தமாக ஆசரித்தல்" ஆகியவையும் பேசப்பட வேண்டியதாக இருந்தது. மீதியான கட்டளைகள் தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களின் பரிசுத்த தன்மைக்கு அளவுகோல்களை வடிவமைத்தது. அவர் பரிசுத்தராக இருப்பதால், அவர்கள் பரிசுத்தமானவர்களாக இருக்க வேண்டும். இந்தக் கட்டளையானது பிற்பாடு நியாயப்பிரமாணத்தில் தெளிவாக உரைக்கப்பட்டது (லேவியராகமம் 11:44, 45) மற்றும் இது புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலரான பேதுருவினால் மீண்டும் உரைக்கப்பட்டது (1 பேதுரு 1:15, 16).

தேவன் எப்போதுமே, தமது கிருபையின் அடிப்படையிலேயே நம்மைப் பரிசுத்தராக இருக்கும்படி அழைக்கிறார். பத்துக்கட்டளைகள் என்பவை, தேவன் நம்மைக் காட்டிலும் அதிகம் வல்லமை உடையவராக இருப்பதால் நம்மீது சுமத்தப்பட்ட "சட்டங்களின் பட்டியல்" மாத்திரமே என்ற வகையில் நினைத்தல் தீவிரமான தவறாக இருக்கும். மாறாக அவைகள், அவரது முழுமையான கிருபையின் இயல்பினுடைய சொல் விளக்கங்களாக உள்ளன. இஸ்ரவேல் மக்கள் அவரது மக்களாக இருக்கும்படி தேர்ந்துகொள்ளப்பட்டது அவரது கிருபையினால் மாத்திரமே. அவர் கிருபையினாலேயே அவர்களை அடிமைத் தளையில் இருந்து விடுவித்தார் (19:4; 20:2). உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள் யாவற்றுடனும், அவர்களுடன் அவர் அதை நிலைநாட்டியதானதும்கூட கிருபையின் செயலாகவே இருந்தது. எனவே கட்டளைகள் தேவனுடைய சொந்தப் பண்பை வெளிப்படுத்துகின்றன. ஒழுக்கமும் ஒழுக்க நெறியும் மேம்போக்கான முறைமைகளாக இருப்பதில்லை; மாறாக அவைகள், தேவன் யாராக இருக்கிறார் மற்றும் அவர் தம் மக்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று விரும்புகிறார் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

*கட்டளைகள் செங்குத்தாகவும் கிடைமட்டமாகவும் ஆணையிடப்பட்டன.* "செங்குத்தாக" என்பது, கட்டளைகள் தேவனுடனான நமது உறவுமுறையை ஆளுகை செய்கின்றன என்று அர்த்தப்படுகிறது, மற்றும் "கிடைமட்டமாக"

என்பது, அவைகள் மற்ற மக்களுடன் நமது உறவுமுறையையும் உள்ளடக்குகின்றன என்று அர்த்தப்படுகிறது. கட்டளைகளைக் கவனமாக வாசித்தலானது, முதல் நான்கு கட்டளைகள் முதன்மைக் கருத்தில் செங்குத்தாக ஆணையிடப்பட்டன (இவைகள் வேறே தேவர்கள் இல்லை, வேறே உருவங்கள் இல்லை, தேவனுடைய நாமத்தை ஜாக்கிரதையாகப் பயன்படுத்துதல் மற்றும் ஓய்வுநாளை ஆசரித்தல் ஆகியவற்றைக் கேட்டுக்கொள்கின்றன). எஞ்சியுள்ள ஆறு கட்டளைகள் கிடைமட்டமாக ஆணையிடப்பட்டன (பெற்றோரைக் கனப்படுத்துதல், கொலை செய்யாதிருத்தல், விபசாரம் செய்யாதிருத்தல், களவு செய்யாதிருத்தல், பொய்ச்சாட்சி சொல்லாதிருத்தல் மற்றும் இச்சியாதிருத்தல்).

இந்த அனுசரிப்பில் உள்ள தனிச்சிறப்பு என்ன? முதலாவது, இது நாம் மற்ற மக்களைத் தவறாக நடத்திக்கொண்டு அதே வேளையில் தேவனுடன் சரியான உறவுமுறையைக் கொண்டிருக்க இயலாது என்று நமக்கு நினைவூட்டுகின்றன. 1 யோவான் 4:20ல் யோவான், "தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?" என்று குறிப்பாக எடுத்துரைத்தார். தேவன் மீதான அன்பு மற்றும் அயலார் மீதான அன்பு ஆகிய இரண்டுமே ஒருசேரச் செல்ல வேண்டும் என்று இயேசு போதித்தார் (மத்தேயு 22:35-40).

இரண்டாவது, பத்துக்கட்டளைகளின் செங்குத்தான /கிடைமட்டமான ஆணையிடுதல், தேவனுடன் சரியான உறவுமுறையில் இருந்தே நல்ல மனித உறவுமுறைகள் வெளியே பாய்ந்தோடி வருகின்றன என்று நமக்குப் போதிக்கிறது. பல மக்கள் மற்றவர்களுடன் நல்ல உறவுமுறைகளை நிலைநாட்ட அல்லது பராமரிக்க இயலாது இருப்பதற்குக் காரணம், அவர்கள் தேவனிடத்தில் தொடர்பற்று இருப்பதே ஆகும். நாம் தேவனுடன் சமாதானமாக இராதபோது, நாம் மற்றவர்ளுடன் சமாதானமாக இருத்தல் சாத்தியமற்றதாக உள்ளது. (இந்த கொள்கையின் ஒரு விளக்கத்திற்கு யாக்கோபு 4:1-4ஐக் காணவும்.)

*கட்டளைகள் உண்மை நிலை கொண்டவையாகவும் பாதுகாப்பவையாகவும் உள்ளன.* பத்துக் கட்டளைகளில் எட்டுக் கட்டளைகள் எதிர்மறையாக - "செய்யாதிருப்பாயாக" என்று - உரைக்கப் பட்டுள்ளன. இது தேவன் ஒரு எதிர்மறையான தேவனாக இருக்கிறார் என்று சுட்டிக்காண்பித்தலுக்கும் அதிகமாக, அவர் நமது மனித விருப்பநோக்கங்களைப் பற்றி உண்மைநிலை கொண்டவராக இருக்கிறார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறன. ஏற்புடைய தடைகள் இல்லாத நிலையில் நாம், கொலை செய்யவும், களவுசெய்யவும், பொய்கூறவும் மற்றும் பிற பாவங்களைச் செய்யவும்கூடும். மனிதரீதியான பாவத்தைக் கையாளுகையில், மறைமுகமாய்க் கூறுதல் செயல்விளைவற்றதாக உள்ளது, எனவே தேவன், பாவம் செய்வதற்கான நமது விருப்பநோக்குப் பற்றி நேரடியாகவும் உண்மை நிலையை மனதில் கொண்டும் பேசியுள்ளார்.

கட்டளைகள் நமது சுய - அழிவைத் தவிர்க்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டு, ''பாதுகாப்பவை'' என்ற நிலையிலும் உள்ளன. யாரோ ஒருவர், "நீங்கள் கட்டளைகள் மீது விழுந்து முறிதல் என்பதைக் காட்டிலும் அதிகமாக 'கட்டளைகளை மீறுதல்' என்பதைச் செய்வதில்லை" என்று ஏற்புடைய வகையில் கூறியுள்ளார். தேவனுடைய பிரமாணங்களை

நாம் புறக்கணிக்கும்போது, நாம் நம்மையே புண்படுத்திக் கொள்கிறோம். எடுத்துக்காட்டாக, புவியீர்ப்பு விசையின் விதியானது நன்கு அறியப்பட்ட ஒரு உண்மையாக உள்ளது. திடப்பொருட்கள் கீழே விழுவதை ஏதொன்றும் தடை செய்யாது இருந்தால் அவைகள் கீழேயே விழும் என்பதை அறிவியலும் அனுபவமும் நமக்குக் கூறுகின்றன. மக்கள் அந்தக் கொள்கையை மறுத்து அது செல்லாதது என்று அறிவிக்கலாம்; ஆனால் யாரேனும் ஒருவர் ஒரு உயரமான கட்டிடத்தின் உச்சிக்கு ஏறிச்சென்றால், புவியீர்ப்பு விதியின் "மீது அவர் விழுந்து முறிவார்." விதி என்பது விஷயங்கள் உள்ள வழிமுறைகளாக இருக்கிறது மற்றும் அதை ஏற்றுக்கொள்ளுதல் என்பது நம்மைத் துன்பத்தில் இருந்து பாதுகாக்கிறது. அதன் நிபந்தனைகளை மறுத்தல் என்பது நமது அழிவுக்கு வழிநடத்துகிறது. ஆகவே தேவன் நமக்குக் கட்டளைகளைக் கொடுப்பதன் மூலம் நாம் நம்மைப் பாதுகாக்க முயற்சி செய்தார். தேவன் கட்டளையிட்டுள்ளது எதுவோ, அது நாம் அவரைக் கனப்படுத்துவதற்கும் நமது சுய பாதுகாப்பிற்குமானதாக உள்ளது.

எகிப்தில் இருந்து இஸ்ரவேல் மக்கள் தப்பி வந்த சற்றுப் பின்பு, பத்துக்கட்டளைகள், தேவனுக்குத் கீழ்ப்படிவதில் இருந்தே உண்மையான விடுதலை வருகிறது என்பதை மக்களுக்கு நினைவூட்டுவனவாக இருந்தன. கட்டுப்பாடற்ற தனித்தன்மை என்பது அடிமைத்தளையைத் தன்னிலே கொண்ட வடிவமாக உள்ளது; அவர்கள் தேவன் கூறுவதைக் கவனிக்க மறுத்திருந்தால், அவர்கள் திரும்பவும் கைதிகள் ஆகியிருப்பர்.

## பத்துக் கட்டளைகளின் விளக்கம்

பத்துக்கட்டளைகள் பெரும்பாலும் சுய விளக்கம் உடையவையாகவும் விரிவாக்கம் தேவைப்படாதவையாகவும் உள்ளன. அவற்றைப் பற்றிப் பெரும்பான்மையான கலந்துரையாடல்கள் அவற்றின் அர்த்தத்தைக் காட்டிலும் அதிகமாக அவற்றின் நடைமுறைப் பயன்பாட்டைப் பற்றியவையாக உள்ளன. ஒரு சில விளக்கங்களே அவசியமானவையாக உள்ளன.

"என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்" என்ற முதல் கட்டளை (20:3), இஸ்ரவேல் மக்கள் கர்த்தருக்கு முன்னுரிமை கொடுத்திருக்கும் வரையில் அவர்கள் மற்ற தேவர்களை ஆராதிக்க அனுமதிக்கப்பட்டனர் என்று அர்த்தப்படுவதில்லை. மாறாக அவர்கள், ஒரே ஒரு தேவனை ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாக இருந்தனர் (ஏசாயா 44:6). ஒரு தேவனை விசுவாசித்தல் என்பது "ஒருதெய்வக் கொள்கை" என்று அழைக்கப்படுகிறது, மற்றும் இஸ்ரவேல் மக்கள் பழங்கால உலகத்தில் ஒருதெய்வக் கொள்கை கொண்ட மக்களினமாக இருந்ததில் தனித்துவம் வாய்ந்தவர்களாக இருந்தனர். இஸ்ரவேல் மக்களைச் சுற்றிலும் இருந்த மக்களினங்களின் பலதெய்வ வணக்கத்தின் காரணமாக, அவர்கள் மற்ற தேவர்களை "கூட்டிக்கொள்ளும்படியாக" நிலையாகச் சோதிக்கப்பட்டனர்; ஆனால், சாமுவேலின் மற்றும் இராஜாக்களின் புத்தகங்கள் விரிவாக வெளிப்படுத்துகிறபடி, அவர்கள் தங்களின் இந்தத் தவறுக்காக எப்போதுமே உயர்ந்த விலையைச் செலுத்தினர்.

இரண்டாம் கட்டளை (20:4-6) விக்கிரகங்களை - உண்மையான ஒரே தேவனின் உருவத்தைக் கூட - ஆராதிப்பதைத் தடைசெய்கிறது. மக்கள், உருவத்திற்கும் அது பிரதிநிதித்துவப்படுத்தும் விஷயத்திற்கும் இடையில் ஒரு

*வித்தியாசத்தை உரிமைகோரினாலும், உருவங்கள் என்பவை கடைசியாக மக்களின் மனதில் இருந்து தேவனை இடம்பெயரச் செய்கின்றன என்பது ஒரு காரணமாக உள்ளது. எந்த ஒரு உருவமும் தேவனைப் போதிய அளவுக்குச் சாத்தியமாகப் பிரதிநிதித்துவப்படுத்த இயலாது மற்றும் அவைகள் அவரது உண்மையான இயல்பிலிருந்து வெளியே தவறாக மாத்திரமே வழிநடத்தப்பட முடியும் என்பது இந்தக் தடைக்கான இன்னொரு காரணமாக இருந்தது. மேலும், விக்கிரகங்கள் என்பவை, நாம் தேவனுடைய படைப்பாக இருக்கிறோம் என்பதை ஒப்புக்கொள்வதற்கு மாறாக, "நமது சாயலில் தேவனை உருவாக்குதல்" என்பதற்கான முயற்சியாக இருந்ததே தவிர வேறுவிதமாக இருக்கவில்லை. மக்கள் "ஒரு தேவனை உருவாக்கிய" உடனே, அந்தத் தேவன் விரும்புவது என்ன என்பதை அவர்கள் தாங்களே தீர்மானிக்கின்றனர். பின்பு அவர்கள் உண்மையில், தங்கள் சுய எண்ணங்களை ஆராதிக்கின்றனர் (ரோமர் 1:18-23). தேவன் எந்தப் போட்டியாளர்களையும் ஏற்றுக்கொள்ள மாட்டார் என்பதை இரண்டாவது கட்டளை தெளிவாக்குகிறது. அவர் "எரிச்சல் உள்ளவராக" இருக்கிறார் - இது மிகவும் கூருணர்வு கொண்டிருத்தல் அல்லது போட்டியினிமித்தம் அஞ்சுதல் என்ற அற்பமான மனித ரீதியான கருத்தில் அல்ல, ஆனால் தமது மக்களின் முற்றிலுமான மற்றும் தனிப்பட்ட வகையிலான பற்றுறுதியை வற்புறுத்துதல் என்ற கருத்தில் அமைந்துள்ளது. நாம் "அவரது மக்களாக" இருக்க வேண்டும் என்றால், அவர் நமது ஒரே ஒரு தேவனாக இருக்க வேண்டும்.*

*யாத்திராகமம் 20:7ம் வசனம் தேவனுடைய நாமத்தை ''வீணிலே வழங்குதலை'' தடைசெய்கிறது. ''வீண்'' என்ற வார்த்தை ''வெறுமை'' அல்லது ''அர்த்தமற்றது'' என்று அர்த்தப்படுகிறது. தேவனுடைய நாமம் ஒரு வெறுமையான ஆணையை அல்லது வாக்குறுதியைப் பாதுகாக்கப் பயன்படுத்தப்படக் கூடாது என்பது தோற்றக்காலக் கருத்தாக இருந்தது - உதாரணமாக, நமது வாக்குறுதியை நிறைவேற்றும் விருப்பநோக்கம் எதுவுமின்றி ''தேவனைக் கொண்டு'' ஆணையிடுதல். ''வீணிலே'' என்ற சொல்விளக்கம், தேவனுடைய நாமத்தை வெறுமையான அல்லது அர்த்தமற்ற வகையில் பயன்படுத்தும் எந்த ஒரு விஷயத்தையும் உள்ளடக்குகிறது. இது இன்றைய நாட்களில் சமூகத்தில் அதிர்ச்சி தரத்தக்க வகையில் கனவீனப்படுத்தப்படும் ஒரு கட்டளையாக உள்ளது!*

*8 முதல் 11 வரையுள்ள வசனங்கள் "ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக'' என்ற நான்காவது கட்டளையை அமைக்கின்றன. இந்தக் கட்டளையைத் தொடர்ந்து இதன் முக்கியத்துவம் பற்றிய ஒரு விளக்கம் தரப்படுகிறது. இது "உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்'' என்று அழைக்கப்படுகிறது. இது கர்த்தருக்கென்று அர்ப்பணிக்கப்பட வேண்டியதும் வேலை செய்யாதிருக்க வேண்டியதுமான நாளாக இருந்தது. ஒவ்வொரு ஏழாவது நாளையும் தனியே பிரித்து வைத்தல் என்பது மக்களுக்கு அவர்களைப் படைத்தது யார் என்பதை நினைவூட்டி, அவர்களின் அன்றாட சாதாரண நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கும்படி அழைப்பதாக இருந்தது. ஓய்வுநாள் என்பது இஸ்ரவேல் மக்களை ஒரு நாளில் ஆராதிக்க, ஓய்வெடுக்க மற்றும் தேவனை நினைவுகூர ஆணையிட்டு அழைப்பித்தது.*

*''உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக'' என்ற கட்டளையானது (யாத்திராகமம் 20:12) தன்னுடன் இணைந்த ஒரு*

வாக்குத்தத்தத்தைக் கொண்டுள்ளது: "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு ..." (பிற்பாடு பவுல் இந்தக் கட்டளையை "வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது" என்று குறிப்பிட்டார்; எபேசியர் 6:1, 2.) இந்தக் கட்டளையைக் கடைப்பிடிக்கும் தனிநபருக்கு, இவ்வாக்குத்தத்தம் நீண்ட வாழ்நாளைக் குறிப்பிடுவதாக சிலர் இதைப் புரிந்து கொண்டுள்ளனர். இவ்வாக்குத்தத்தம், அடிப்படை மதிப்பும் மரியாதையும் குறைவுபட்டால் எந்த ஒரு மக்களினமும் உயிர்பிழைக்க இயலாது என்பதற்கான ஒரு நினைவூட்டுதலாக இருப்பதற்கே அதிக சாத்தியம் உள்ளது. பெற்றோரைக் கனவீனப்படுத்துதல் என்பது, சமூகத்தைப் பெருங்குழப்பத்திற்கு வழிநடத்துகிறதும் கடைசியில் ஒரு மக்களினத்தின் வீழ்ச்சிக்கு வழிநடத்துகிறதுமான, முற்றிலும் சுய மையங்கொண்ட தன்மையைக் குறிப்பதாக உள்ளது.

கொலை செய்தலுக்கு எதிராக யாத்திராகமம் 20:13ல் உள்ள தடையானது, போர் செய்தல் மற்றும் மரண தண்டனை தருதல் ஆகியவற்றை நீக்கிப்போட தேவன் விருப்பநோக்கம் கொண்டிருந்தாரா இல்லையா என்பது பற்றி அதிகமான கலந்துரையாடலைத் தூண்டிள்ளது. "கொல்லுதல்" என்பதற்கான எபிரெய வார்த்தை "கொலை" என்று அர்த்தப்படுகிறது, எனவே இது போர் செய்தல் மற்றும் சட்டப்பூர்வமான மரண தண்டனைகள் ஆகியவற்றைத் தானாகவே நீக்கிப்போடுவதில்லை. பழைய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதி, இஸ்ரவேல் மக்கள் (பெரும்பாலும் தேவனுடைய கட்டளைப்படியே) இவ்விரு நடவடிக்கைகளையும் செயல்படுத்தியதைக் குறிப்பிடுகிறது.

14 முதல் 16 வரையிலான வசனங்கள் சுய விளக்கம் கொண்டுள்ளன, ஆனால் ஒரு குடிமை அரசைப் பராமரிப்பதற்கான இஸ்ரவேலின் திறன் மீது இவற்றின் (இவ்வசனங்களின்) முக்கியத்துவத்தைக் காணாமல் விட்டு விட இயலாது. மீண்டுமாக இந்தக் கட்டளைகள், ஒழுக்கம் மற்றும் ஒழுக்க நெறிகள் ஆகியவற்றின் மிகவும் அடிப்படையான அம்சங்களைக் கையாளுகின்றன. விபசாரம், களவு செய்தல் மற்றும் ஒருவரிடத்தில் அல்லது ஒருவரைப் பற்றிப் பொய்கூறுதல் ஆகியவை, சமூகத்தின் நெறிமுறையைச் சாத்தியமற்றவை ஆக்குகின்றன. இந்த செயல்முறைகளை நமது சொந்த சமூகத்தில் நாம் எவ்வளவு அதிகமாகக் காணுகிறோமோ அவ்வளவு அதிகமாக இது மிகவும் தெளிவாகிறது. இந்த அடிப்படை விதிகள் கடைபிடிக்கப்படாத இடத்தில், சமூகப் பெருங்குழப்பம் விளைகிறது.

பத்தாவது கட்டளை (20:17) இச்சித்தலை அல்லது நம்முடையதல்லாத சிலவற்றை நாம் கொண்டிருக்க விரும்புதலைத் தடைசெய்கிறது. இச்சித்தல் என்பது, விபசாரம், களவு, பொய்ச்சாட்சி மற்றும் கொலைசெய்தலுக்குக்கூட வழிநடத்தக்கூடிய, இருதயத்தின் அடிப்படை எண்ணப்போக்காக உள்ளது. கட்டளைகள் அவற்றின் தீவிரத்தன்மையின் "இறங்கு வரிசையில்" உள்ளன என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர், ஆனால் இச்சித்தலின் மறைமுகக் கருத்துக்கள் இந்த விளக்கத்திற்கு எதிரானவையாக உள்ளன. பலர் உற்றுநோக்கியுள்ளபடி, இந்தக் கடைசிக் கட்டளை மட்டுமே வெளிப்படையான செயல்பாட்டிற்கு மாறாக இருதயத்தின் எண்ணப்போக்கைக் கையாளுகிற ஒரே கட்டளையாக உள்ளது. இது, குறிப்பாகப் பவுல் புதிய ஏற்பாட்டில் பொருளாசையை விக்கிரக ஆராதனையுடன் சமமாக்கினார் என்ற உண்மையின் வெளிச்சத்தில்,

குறிப்பிடத்தக்க கருத்தாக உள்ளது (எபேசியர் 5:5; கொலோசெயர் 3:5). இருதயத்தின் எண்ணப்போக்குகளே செயல்களுக்கு வழிநடத்துகின்றன, மற்றும் கட்டுப்படுத்தப்படாத பொருளாசையின் விளைவுகள் மிகவும் தீவிரமானவையாக இருக்க முடியும் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும்.

தேவனிடத்தில் இருந்து வந்த ''பத்து வார்த்தைகளை'' நாம் ஆய்வுசெய்கையில், அவைகள் மோசேயின் மூலமாகத் தரப்பட்ட தேவனுடைய பிரமாணத்தின் முழுமையான பகுதியல்ல ஆனால் அதன் மையப்பகுதியாக மாத்திரமே இருந்தது என்பதை நினைவுகூருதல் முக்கியமானதாக உள்ளது. யாத்திராகமம் 21-23 மற்றும் லேவியராகமம் புத்தகம் முழுமையும், இன்னும் குறிப்பான பிரமாணங்கள் பலவற்றைக் கொண்டுள்ளன, இவைகள் இந்தப் பத்துக் கட்டளைகளின் அத்தியாவசியமான வெளிவளர்ச்சிகளாக உள்ளன. மோசேயின் நியாயப்பிரமாணத்தின் நிபந்தனைகளை நாம் ஒருக்காலும் மிகையாக எளிமையாக்கிவிடக் கூடாது. நாம், "நான் பத்துக் கட்டளைகளின்படி வாழ்வதால், தேவனுடன் நேராக இருக்கிறேன்'' என்று கூற இயலாது. கட்டளைகளின்படி வாழுதல் என்பது நல்லதொரு தொடக்கமாக இருக்கையில், தேவனுடன் நேராக இருப்பதற்கு அதைக் காட்டிலும் அதிகமான விஷயங்கள் செய்யப்பட வேண்டியுள்ளன.

## பத்துக்கட்டளைகளின் இன்றைய நாட்களுக்கான பயன்பாடு

பத்துக் கட்டளைகள் ஒரு குறிப்பிட்ட மக்களினத்திற்காக மிக நீண்ட காலத்திற்கு முன்பு தரப்பட்டன. நமது சொந்த கலாச்சாரமும் வரலாற்றுச் சூழ்நிலைகளும் அவர்களுடையவற்றில் இருந்து வெகுதொலைவில் இருப்பதால், கட்டளைகள் என்பவை இன்றைய நாட்களில் நமக்குக் கொண்டுள்ள பொருத்தம் என்ன?

முதலாவது, அவைகள் நித்திய மதிப்புடைய ஒழுக்கரீதியான முற்றான கோட்பாடுகளாக உள்ளன என்பதை நமக்கு நினைவூட்டுகின்றன. "ஒழுக்கரீதியாக சார்பளவுத் தத்துவம்'' என்பதே நமது காலங்களின் ஆய்வுக்கருத்தாக உள்ளது. எளிமையாகக் கூறுவதென்றால், எந்த ஒரு விஷயமும் தன்னிலே முற்றிலும் சரியானது அல்லது தவறானது என்று கண்ணோக்கப்படுவதில்லை என்றே இது அர்த்தப்படுகிறது. ஒவ்வொரு விஷயமும் "சார்பளவில்'' உய்த்துணரப்படுகிறது; எது சரியானது என்பதும் எது தவறானது என்பதும் தனிநபரின் சூழ்நிலைகளைச் சார்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இவ்வகையான சிந்தித்தலின்படி, ஏதேனும் ஒருவிஷயம் ஒரு நபருக்குச் சரியானதாகவும் இன்னொரு நபருக்குத் தவறானதாகவும் இருக்க முடியும், அத்துடன் எந்த ஒரு விஷயமும் முற்றிலுமானதாக இராது.

கட்டளைகள் வேறுவிதமாகக் கூறுகின்றன. அவைகள், எப்போதுமே தவறான மற்றும் எப்போதுமே சரியான விஷயங்கள் உள்ளன என்ற கருத்தை உறுதிப்படுத்துகின்றன. அவைகள் தேவனுடைய ஒழுக்கரீதியான பிரமாணங்களின் முழுமைத்தன்மை பற்றிய வழுவற்ற கூற்றுக்களாக உள்ளன.

பத்துக்கட்டளைகளின் இந்தப் பண்பே, மிகச்சரியாக இவற்றைப் பொதுவான

உணர்வுகளில் இருந்து நீக்க வேண்டும் என்று விரும்பக் காரணமாகின்றன. இது, கிறிஸ்தவர்கள் அல்லது யூதர்களின் மதரீதியான உணர்வுகளைப் புண்படுத்தியதால் என்பதைக் காட்டிலும் அதிகமாக, முற்றிலும் சரியானது அல்லது தவறானது என்பது ஒன்றுமில்லை என்ற மேலோங்கிய கருத்தைப் புண்படுத்துதலின் காரணமாகவே இவ்வாறு இருந்தது. உண்மையில் பத்துக் கட்டளைகள் பெரும்பாலும், நித்தியத்துவத்திற்கான கருத்துக்களில் தங்களை நீக்கிக்கொள்ள விரும்பும் மக்களிடமிருந்து வருகிற தேவதூஷணமான தாக்குதல்களின் கீழாகவே வருகின்றன. பின்வருவன போன்ற கூற்றுக்கள் அசாதாரணமானவைகளாக இருப்பதில்லை:

> ... இந்த நம்பிக்கை உண்மை நிலையுடன் இணைவு கொண்டிருப்பதில்லை. முதல் நான்கு கட்டளைகள் ... பல விசுவாசப் பாரம்பரியங்களைக் கொண்ட மக்களுக்கு ஏற்புடையதல்லாத ஆராதனையின் குறிப்பிட்ட நடைமுறைகளை வேண்டிக்கேட்கின்றன.
>
> முதல் கட்டளை, யெகோவாவைத் தவிர வேறு எந்தத் தெய்வத்தையும் ஆராதிப்பதைத் தடைசெய்கிறது; இது புத்த மதம் (சில பாரம்பரியங்கள்), இந்து மதம், சீக்கிய மதம், விக்கா மதம் இன்ன பிறவற்றைக் கண்டனம் செய்கிறது. இது மத நம்பிக்கைகளில் சுதந்தரத்தை உத்தரவாதம் செய்கிற அமெரிக்க நாட்டின் சட்டத்தினுடைய முதல் பிரிவிற்கு நேர் முரணானதாக உள்ளது. இது மற்ற விசுவாசங்களைச் சகித்துக்கொள்ளக் கூடாததாக உள்ளது மற்றும் இது சிறுபான்மை மதங்களுக்கு எதிராக வெறுப்பையும் வன்முறையையும் உருவாக்கக் கூடும்.
>
> தோற்ற காலப் பத்துக்கட்டளைகளில் நான்கு கட்டளைகள், கடந்து சென்ற நூற்றாண்டுகளில் இருந்த ஒரு சிறு மக்களினமான எபிரெயர்களின் உள்ளூர்க்குலக்கடவுளான ஏல் என்பவரின் தன்முனைப்புத் தாக்குதலைத் தவிர வேறு எந்த நோக்கத்திற்கும் பயன்படுவதில்லை. மற்ற கட்டளைகள் ஒன்று மிகவும் பலவீனமாக, அல்லது மிகவும் பலமானதாக அல்லது மிகவும் தெளிவற்றதாக உள்ளன.[1]

மேற்காணப்படுபவற்றில் கடைசிக்கூற்றின் எழுத்தாளர், ''மனித ஒழுக்கத்திற்கான இந்தக் கற்கால வழிகாட்டியை இன்றைய நாட்களுக்கு ஏற்றவை'' ஆக்குவதற்காகத் தமது சுயத்தில், "பகுத்தறிவுக்கேற்ற பத்துக் கட்டளைகள்'' என்பதைக் கூடுதலாக்கும் அளவுக்குச் சென்றிருக்கிறார் (இவர் ஒரு பெண் எழுத்தாளர் ஆவார்). "உங்கள் விசுவாசத்தை உங்களுக்கே தனிப்பட்டதாகக் காத்துக்கொள்ளுங்கள், மற்றவர்களை மனமாற்றவோ அல்லது உங்கள் நம்பிக்கைகளை உங்கள் பிள்ளைகள் உட்பட, மற்ற எவர்மீதும் பலவந்தமாகத் திணிக்க நாடாதிருங்கள்'' என்பது இவரின் ஒரு கட்டளையாகும்.

ஒரு குழுவானது, தனது சொந்தமான, "பத்துக்கட்டளைகளுக்கு மாற்றான கட்டளை அமைவுகளை'' அளிக்கிறது, "இவைகள் பலவிதமான விசுவாசம் கொண்ட குழுக்களின் நபர்களால் அதிகம் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவையாக" இருப்பதால், இவைகள் தேவனுடைய பத்துக்கட்டளைகளுக்குப் பதிலிகளாக

இருக்கின்றன என்று அவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். அவர்களால் முன்மொழியப்பட்டுள்ள பட்டியல்களில் ஒன்று, தேவனைப்பற்றியோ அல்லது வேறு எந்த தெய்வத்தைப் பற்றியோ எந்தக் குறிப்பையும் ஏற்படுத்துவதில்லை! இப்படிப்பட்ட முன்மொழியப்பட்டுள்ள இரண்டாவது அமைவு ஒன்று, "உங்கள் விசுவாசப் பாரம்பரியத்திற்குள் இருக்கும் எந்தத் தெய்வத்தையும், நீங்கள் பின்பற்றினால், அதை மதித்து ஆராதியுங்கள்" என்று தொடங்குகிறது.

இப்படிப்பட்ட முன்மொழிதல்களின் பொதுவான இலக்கு தெளிவானதாக உள்ளது: சரி மற்றும் தவறு அல்லது சத்தியம் மற்றும் தவறு, என்பதைப் பற்றிய முற்றான தர அளவைகள் எதையும் நீக்கிப் போட்டு, மக்கள் தங்கள் சொந்தப் பிள்ளைகளுக்குக் கூடத் தங்கள் விசுவாசத்தைப் போதித்தலைத் தடைசெய்தல்! இது, தங்களின் கண்ணோட்டக் கருத்து மாத்திரமே "பகுத்தறிவுக்கு ஏற்றதாக" உள்ளது என்று வலியுறுத்தச் சுயாதீனம் கொண்டுள்ள, இந்தப் பதிவேடுகளின் எழுத்தாளர்களை விலக்கி வைக்கிறது என்பதை ஒருவர் கற்பனை மாத்திரமே செய்ய முடியும்.

மேலே சுட்டிக்காட்டப்பட்ட பாவங்கள் மனித இனத்துடன் தொடர்ந்து செல்லும் பிரச்சனைகளாக இருப்பதால், பத்துக் கட்டளைகள் பாவங்களைத் தடைசெய்கிறது. இந்தக் காரணத்தினால், பெரும்பான்மையான கட்டளைகள், புதிய ஏற்பாட்டில் இயேசு மற்றும் அவரது அப்போஸ்தலர்கள் ஆகியோரால் மீண்டும் உரைக்கப்பட்டன, இது அதே கொள்கைகள் இன்னும் அமுலில் இருப்பதைக் சுட்டிக்காண்பிக்கின்றன.

*இரண்டாவது, பத்துக் கட்டளைகள் நம்மை இரட்சிக்கும் நோக்கங்கொண்டவை அல்ல, ஆனால் நமது மீட்பரைச் சுட்டிக்காட்டும் நோக்கம் கொண்டவை என்பதை நாம் நினைவுகூர வேண்டும்.* பத்துக் கட்டளைகள், நாம் எவ்வளவு நன்கு செயல்படுகிறோம் என்பதை அல்ல, ஆனால் தேவனுடைய கிருபையில் இருந்து நாம் எவ்வளவு குறைவுபட்டு விழுகிறோம் என்பதையே பத்துக் கட்டளைகள் காண்பிக்கின்றன என்பதை எந்த ஒரு நேர்மையான நபரும் காண முடியும். இதை நாம் உணர்ந்து அறிந்த உடனே, ஒரு மீட்பர் நமக்குத் தேவை என்பதை உணர்ந்து அறிதவில் நாம் இடர்பாடு எதையும் கொண்டிருக்கக் கூடாது. இதுவே மிகச்சரியாகப் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களின் புரிந்து கொள்ளுதலாக உள்ளது:

> ஆதலால் விசுவாசம் வருகிறதற்கு முன்னே, வெளிப்படப்போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் அடைக்கப்பட்டவர்களாய் நியாயப்பிரமாணத்தின்கீழ் காவல்பண்ணப்பட்டிருந்தோம். இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும்பெண்ணென்றுமில்லை;நீங்களெல்லாரும்கிறிஸ்துஇயேசுவுக்குள்

*ஒன்றாயிருக்கிறீர்கள் (கலாத்தியர் 3:23-28).*

*மேலும், வாய்கள் யாவும் அடைக்கப்படும்படிக்கும், உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவானவர்களாகும்படிக்கும், நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம். இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை.*

*இப்படியிருக்க, நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது; அதைக்குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது. அது இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும், வித்தியாசமே இல்லை. எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்; தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக்கொண்டதைக் குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும் இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார் (ரோமர் 3:19-26).*

*எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான். ஏனென்றால், விபசாரஞ்செய்யாதிருப்பாயாக என்று சொன்னவர் கொலைசெய்யாதிருப்பாயாக என்றும் சொன்னார்; ஆதலால் நீ விபசாரஞ்செய்யாமலிருந்தும் கொலைசெய்தாயானால் நியாயப்பிரமாணத்தை மீறினவனாவாய் (யாக்கோபு 2:10, 11).*

பத்துக் கட்டளைகளில் விளக்கப்பட்டுள்ளபடி, நியாயப்பிரமாணம் என்பது, பாவம் என்றால் என்ன என்று நமக்குக் காண்பிப்பதற்கு அவசியமான ஒரு படியாக இருந்தது; ஆனால் அது மாத்திரமே நம்மை இரட்சிக்க இயலாது. பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமாக நம்மை இரட்சித்துக் கொள்ள முயற்சி செய்தல் என்பது வீணானதாக உள்ளது. நோயைச் சோதித்து அறிதல் என்பது அதற்கான சிகிச்சையாக இருப்பதில்லை. நியாயப்பிரமாணம் நோயைச் சோதித்து அறிதலை அளிக்கிறது: பாவம். சுவிசேஷமானது சிகிச்சையை அளிக்கிறது: இயேசு கிறிஸ்து. பத்துக் கட்டளைகளைக் கேள்விப்படுதல் நம்மை, நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்தலினால் பெற்றுக் கொள்ள இயலாத இரட்சிப்பிற்காகக் கிறிஸ்துவின் சிலுவையை நோக்கி ஓடும்படி நம்மைக் கட்டாயப்படுத்த வேண்டும்.

*தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு நியாயப் பிரமாணத்தைக் கொடுப்பதற்காக அவர்களைச் சீனாய் மலையின் அடிவாரத்தில் ஒன்று கூட்டியபோது, அவர் மோசேயுடனான தமது உடன்படிக்கையின் முதல்நிலை நிபந்தனைகளை உரைத்தார், மோசே அவற்றை மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டி இருந்தது. இந்த நிபந்தனைகள் யாத்திராகமம் 19:5, 6அ வசனங்களில் தொகுத்துரைக்கப் பட்டுள்ளது: "இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள்." இந்த வார்த்தைகளை இஸ்ரவேல் மக்கள் கேள்விப்பட்டபோது, அவர்கள் ஒரே குரலில் பின்வருமாறு பதில் உரைத்தனர்: "கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம்!" (யாத்திராகமம் 19:8அ). ஒப்புக்கொடுத்தல் மற்றும் கீழ்ப்படிதல் என்பவற்றின் இந்த எண்ணப்போக்கு மாத்திரமே, தேவனுடன் ஒரு உடன்படிக்கை உறவில் நாம் உள்நுழையக்கூடிய எண்ணப்போக்காக உள்ளது. "செய்ய வேண்டியவை" மற்றும் "செய்யக் கூடாதவை" என்பவற்றின் ஒரு உலர்ந்த பட்டியலாக மாத்திரமே இருத்தலில் இருந்து தூரத்தில், பத்துக்கட்டளைகள் இஸ்ரவேல் மக்களுக்கு, அன்பு மற்றும் பற்றுறுதி ஆகியவற்றின் உடன்படிக்கை உறவு ஒன்றை ஆணையிட்டது. கிறிஸ்துவின் மூலமாக நாம், நமது பின்னணிகள், நமது மக்களின் வகைகள், மற்றும் நமது பாவங்கள் ஆகியவற்றைத் தாண்டி, இன்றைய நாட்களில் ஒரு உடன்படிக்கை உறவில் உள்நுழையும்படி தொடர்ந்து ஆணையிடப் பட்டிருக்கிறோம். கர்த்தர் பேசியுள்ளார். நாம் கீழ்ப்படிவோமா?*

---

*குறிப்புகள்*

[1]*இந்தக் கூற்றுக்கள் யாவையும், தங்களை "மதரீதியாகச் சுதந்தரர்கள்" என்று விவரித்துக் கொள்ளும் எழுத்தாளர்களின் வலைத்தளம் ஒன்றில் உள்ளன* (www.sealfd.hotmail.msn.com; Internet; accessed May 2009). *இந்தக் தளத்தில் இத் தகவல்கள் இப்போது கிடைப்பதில்லை என்றாலும், இதே கூற்றுக்களில் சிலவும் இதைப் போன்ற கூற்றுக்களும்* http://www.religioustolerance.org/chr_10cn.htm; Internet; accessed 3 February 2010 *என்ற வலைத்தளத்தில் காணப்படலாம்.*

---

## ஓய்வுநாள்

*யாத்திராகமம் 20:9, 10 வசனப் பகுதியானது, ஓய்வுநாள் (shabbath, "ஓய்ந்திருத்தல்") என்பது, தேவன் "ஓய்ந்திருந்த" நாளாக (ஆதியாகமம் 2:2, 3), படைப்பின் ஏழாம் நாளுக்கு இணையான, வாரத்தின் ஏழாம் நாள் என்பதைத் தெளிவாக்குகிறது. தேவன் களைத்துப் போய்விட்டார் என்று இவ்வார்த்தை மறைமுகமாக உணர்த்துவதில்லை, ஆனால் அவர் தமது படைப்புச் செயல்களை விட்டு ஓய்ந்து இருந்தார் என்று மாத்திரமே குறிப்பிடுகின்றன. தேவன் எல்லாவற்றையும் படைப்பவராகவும் காத்து நிலைநிறுத்துபவராகவும் இருக்கிறார் என்பதை நினைவூட்டுவதாக இருக்கும் வகையில், இஸ்ரவேல் மக்கள் ஒவ்வொரு வாரத்தின் ஏழாம்நாளையும் எந்த வேலையையும் செய்யாமல் ஆசரிக்க வேண்டியிருந்தது. ஓய்வுநாள் ஆசரிப்பிற்கு*

*உபாகமம் 5:15ம் வசனம் இன்னொரு காரணத்தைக் கூடுதலாகக் கூறுகிறது: இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் ஓய்வு மிகவும் அவசியமாகத் தேவைப்பட்ட நிலையில் அடிமைகளாக இருந்தனர் என்பதை நினைவூட்டும் வகையில் அவர்கள் ஓய்வுநாளை ஆசரிக்க வேண்டி இருந்தது.*

*"ஓய்வுநாளை நினைவுகூருதல்" மற்றும் "அதைப் பரிசுத்தமாய் ஆசரித்தல்" என்பவை, அந்த நாளை மற்ற எல்லா நாட்களிலும் இருந்து வேறுபட்டதாக மதித்து, அது தேவனுக்கென்று விசேஷமாக ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள் என்று மதிக்க வேண்டும் என்பதாக அர்த்தப்பட்டது. இந்தக் கட்டளையை மீறுதல் என்பது, தேவன் இஸ்ரவேல் மக்களுடன் ஏற்படுத்தி இருந்த உடன்படிக்கையில் இருந்து தீவிரமாக விலகுதல் என்று கருதப்பட்டது (யாத்திராகமம் 31:12-17).*

*இயேசுவின் காலத்தில், ஓய்வுநாளின் பரிசுத்தத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும்படி வடிவமைக்கப்பட்டிருந்த பல நிபந்தனைகளின் சேனையினால் அது சூழ்ந்து கொள்ளப்பட்டிருந்தது மற்றும் இவைகள் மூடநம்பிக்கையின் பண்பை மேற்கொண்டிருந்தன. குறிப்பாக, "அதிலே நீயானாலும், ... யாதொரு வேலையும் செய்யவேண்டாம்" (யாத்திராகமம் 20:10) என்று தேவன் கூறியபோது "வேலை" என்ற வார்த்தையின் மூலம் அவர் அர்த்தப்படுத்தியது என்ன என்பதை மிகச்சரியாக விளக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இது சிலவேளைகளில், வியாதியாக இருப்பவர்கள் மற்றும் தேவையில் உள்ளவர்கள் ஆகியோருக்கு ஓய்வுநாளில் உதவி செய்தல் சட்டவிரோதமானது என்று கூறும் அளவுக்குக் கூட விரிவாக்கப்பட்டது. இயேசு மீண்டும் மீண்டுமாக, தமது நாட்களில் இருந்த மதத் தலைவர்களுடன் விவாதம் செய்ய வந்தார் - இது அவர் யாத்திராகமத்தில் காணப்பட்ட ஓய்வுநாளில் ஒழுங்குமுறைகளை மீறினார் என்பதற்காக இல்லாமல், அதன் ஆசரிப்புடன், குறிப்பாகப் பரிசேயர்களால் கூட்டப்பட்ட ஒழுங்கு முறைகளைப் புறக்கணித்தார் என்பதற்காகவே விவாதம் செய்யப்பட்டது (உதாரணத்திற்கு, மாற்கு 3:1-6; லூக்கா 13:10-17; யோவான் 5:1-16; 9:1-41 ஆகிய வசனப்பகுதிகளைக் காணவும்). அவரும் அவருடைய சீஷர்களும், ஓய்வுநாள் பற்றிய தங்களின் (பரிசேயர்களின்) கண்ணோட்டத்தை மீறினர் என்பதைப் பற்றிய அவர்களின் தொடர்ந்த விமர்சனம், இதைப் பற்றிய மாபெரும் இரண்டு சத்தியங்களை அறிவிக்கும்படி இயேசுவை வழிநடத்திற்று: "மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது" மற்றும் "ஆகையால் மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்" (மாற்கு 2:23-28).*

*பத்துக் கட்டளைகளில் ஓய்வுநாள் பற்றிய கட்டளை மாத்திரமே (கட்டளை என்ற வகையில்) புதிய ஏற்பாட்டில் மீண்டும் எடுத்துரைக்கப்படவில்லை. மாறாக, தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல்நாளை (ஞாயிற்றுக் கிழமையை)த் தங்கள் ஆராதனை நாளாக ஆசரித்தனர், அதை அவர்கள் "கர்த்தரின் நாள்" என்று அழைத்தனர் (காண்க நடபடிகள் 20:7; 1 கொரிந்தியர் 16:1, 2; வெளிப்படுத்தின விசேஷம் 1:10). இந்த நாள் கர்த்தர் மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுந்த நாளாக இருந்தபடியால் இதைத் தேர்ந்து எடுத்தது தக்க வகையிலானதாகவே இருந்தது; மேலும் ஆராதனை நாட்களில் ஏற்பட்ட மாற்றமானது தொடக்ககால விசுவாசிகள், யூதத்தவத்தில் இருந்து பிரிந்து தங்கள் சொந்த அடையாளத்தை நிலைநாட்டிக்கொள்வதில் அவர்களுக்கு உதவிற்று.*

*நவீனப் பழக்க வழக்கங்கள் போலின்றி, கர்த்தருடைய நாள்*

*(ஞாயிற்றுக்கிழமை) என்பது வேத வசனங்களில் ''ஓய்வுநாள்'' என்று ஒருக்காலும் குறிப்பிடப்படவில்லை. "கிறிஸ்தவ ஓய்வுநாள்" என்ற கருத்தானது, கிறிஸ்தவத்தின் வரலாற்றில் பிற்பாடு, கிறிஸ்தவர்களின் ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பில் ஓய்வுநாளின் கட்டுப்பாடுகளை (அடிப்படையாக, வேலை செய்யாதிருத்தலை) வலிந்து திணிக்கும் விருப்பம் ஏற்பட்ட போது உருவாயிற்று. இது தனித்தனியான இரு உடன்படிக்கைகளில் இருந்து விளைந்த தனிப்பட்ட இரு அமைப்புகளுக்கு இடையில் ஒரு குழப்பத்தை உருவாக்குகிறது. இருப்பினும் தேவனுக்கென்று விசேஷமாக நேரத்தை அர்ப்பணித்தல் என்ற கருத்து இரு ஆசரிப்புகளிலும் முக்கியத்துவம் கொண்டுள்ளது.*